1969 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1963-லே அரசாங்கம் 9 லட்சத்து 11 ஆயிரத்திற்குத் திட்டம் கொடுத்தது. பொதுவாக ஆலந்தூர் பஞ்சாயத்து சிறிய அளவிலே அப்பொழுது இருந்தது. ஆனால் இப்பொழுது ஆதம்பாக்கம், பவளந்தாங்கல், நங்கநல்லூர் போன்றவையும் சேர்ந்துவிட்ட பிறகு அதைப் பெரிய திட்டமாக்க வேண்டுமென்ற அளவிலே அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற நிலையில் அதற்காக ஆய்விற்காக 31,810 ரூபாய் செலவை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. 1965-க்குப் பிறகு அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சாக்கடைத் திட்டங்களுக்காக 12 கோடியே 50 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் கூட 1 கோடி ரூபாய்தான் புதிய திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புதிய திட்டங்களிலே ஆலந்தூரும் சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே, அதுவும் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கே. விநாயகம் : ஆலந்தூர் முனிசிபாலிடி சென்னைக்கு அருகாமையில் இருப்பது மன்றி அண்டர் கிரவுண்ட் டிரெய்னேஜ் இல்லாததால் கழிவு நீர் எல்லாம் அங்கே ஊறி சுற்றுப்புறத்தில் இருக்கும் கிணற்றுத் தண்ணீர் கெட்டுப்போய் குடிக்க முடியாத அளவுக்கு (not portable water) இருக்கிறது. அதனால் பல நோய்கள் பரவுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அதற்கு உடனடியாகப் பரிகாரம் தேட இந்த ஆண்டே அதைச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைத்தான் நான் சொன்னேன். இந்த ஆண்டு ஆலந்தூர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

* 500 **வினா.—திரு. ரா. சௌந்தர பாண்டியன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரூர் நகரத்திற்கு பாதாள சாக்கடை அமைக்க வேண்டும் என கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வந்தது ? அது தற்போது எந்நிலைமையில் இருந்து வருகிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) கரூர் நகருக்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டும் என்று கோரி அந்நகராட்சி திருச்சி மாவட்ட ஆட்சியாளருக்கு 1955-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் விண்ணப்பம் செய்தது.

(இ) கரூர் நகர சாக்கடைத் திட்டத்திற்கு அரசினர் ஒப்புதல் அளிக்கவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அது அரசுக்கு எப்போது வந்தது ? அது எந்த நிலைமையில் இருக்கிறது ? இனியாவது கரூர் சாக்கடைத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1955-ம் ஆண்டில் நகராட்சியினர் அரசாங்கத்துக்கு விண்ணப்பித்தார்கள். பிறகு மனு என்ன ஆனது என்று தெரியவில்லை. இந்த முறை அரசாங்கமே பரிசீலனை செய்யும்போது கரூர் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுவதாக முடிவு எடுக்கவில்லை. காஞ்சிபுரம், சேலம், திருச்சிராப்பள்ளி, ஆலந்தூர் ஆகிய இடங்களில்தான் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளவதாகத் திட்டம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]